**தலைப்பு 002 – பிரதம அமைச்சர் அலுவலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 002 – பிரதம அமைச்சர் அலுவலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2023 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் பிரதம அமைச்சர் அலுவலகம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2023 ஜூலை 07 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக் கூற்றுக்களின் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அலுவலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய

வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அலுவலகத்தினால் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன,

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆண்டின் போது 17 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 70,948,731 இற்கான மீண்டுவரும் செலவு சரியான செலவு விடயத்தின் கீழ் உட்படுத்தப்படாமல் 002-1-1-0-1409 (ஏனைய) செலவு விடயத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்ததென தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | பிரதம அமைச்சர் அலுவலகத்தின் அலுவல்களை சிறந்த ஒழுங்கிணைப்பதற்காக மாத்திரம் 1402 செலவு விடயத்தின் கீழ் தொலைபேசி மற்றும் தபால் கட்டணம் பயன்படுத்தி செலவு மேற்கொண்டிருந்ததுடன், அதற்கு புறம்பான கௌரவ பிரதமரின் தலைமையில் அலரி மாளிகையில் பல்வேறு கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களுக்காக தொடர்பாடல் உபகரணங்கள் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டது எனவும், அதற்காக செலவிடப்பட்ட தொகை 1409 செலவு விடயத்தின் கீழும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி உத்தியோகத்தர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட வரையறையுள் வழங்கப்படும் சீருடைகள் மற்றும் உணவுச் செலவுகள் 1203 செலவு விடயத்தை பயன்படுத்தி கணக்கீடு செய்தல் மேற்கொள்ளப்பட்டதெனவும், | செலவுகள் சரியான செலவு விடயத்தை இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கௌரவ பிரதமரின் பல்வேறு பிரபுகள் மற்றும் இராஜதந்திரிகள் பிரதமரை சந்திக்கும் சந்தர்ப்பங்களில் மற்றும் விழா ஏற்பாடுகளின் போது உணவு உபசரிப்பு அலுவல்களுக்காக செலவிடப்பட்ட செலவுகள் 1409 செலவு விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததெனவும், இதற்கு சமமான முறையிலான செலவுகளுக்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கும் போது போலவே மேலதிக ஏற்பாடுகள் விண்ணப்பிக்கும் போது 1409 செலவு விடயத்தின் கீழ் திறைசேரியில் இருந்து ஏற்பாடுகள் பெற்றுக்கொண்டு செலவுகள் மேற்கொள்ளப்பட்டதெனவும், கட்டிடங்கள் மற்றும் நிர்மாண வேலை கருமங்களின் கீழ் வராத CCTV முறைமைக்கு உரிய சேவைகள், நிழல் பிரதி இயந்திரத்திற்கான சேவைகள், மின் உயர்த்திகளுக்கான சேவைகள், மின் பிறப்பாக்கிச் சேவைகளுக்கு உரிய சேவை உடன்படிக்கைகளுக்காக செலவளிக்கப்படும் பணம் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் சேவை வகையான செலவுகளின் கீழுள்ள 1409 செலவு விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டதெனவும், Bath Tub திருத்த வேலை / Electric Cable Hoist Machine திருத்த வேலைச் செலவுகள் இனங்காணும் வழுவின் காரணமாக 1409 செலவு விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டதெனவும், எதிர் காலத்தில் இவ்வாறான செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்காக உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டதென அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | மின்சார மற்றும் நீர் பில் பத்திரங்களுக்காக மேற்கொள்ளப்படும் செலவுகள் ரூபா 8,278,004 தொகை 002-1-1-0-1403 (நீர் மின்சார பில்பத்திரங்கள்) | 2022 ஆண்டில் காலாண்டு அடிப்படையில் ஒதுக்கப்பட்டு செலவுகள் மேற்கொள்ளும் படி அறிவுரை வழங்கப்பட்டிருந்ததெனவும், பிரதமர் | வாக்குப்படி பேரேட்டு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்து நாளதுவரையாக பேணிச் செல்ல வேண்டும். |

| | | |
|---|---|---|
| செலவு விடயங்களின் கீழ் உட்படுத்தப்படாமல் ஏனைய 2 செலவு விடயங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அலுவலகத்தின் விடயப் பரப்பின் படி விஷேட கடமைகள் சாட்டப்படுகின்றமையாலும் பண்டங்கள் மற்றும் சேவைகளின் விலைகள் அதிகரித்த காரணத்தினாலும் காலாண்டிற்குரிய ஏற்பாட்டு வரையறை அலுவலக விடயங்களை இடையறாமல் நடாத்திச் செல்வதற்காக போதியளவாக காணப்படாமை, மின்சார மற்றும் நீர் பில்பத்திரங்கள் குறிப்பிட்ட கால வீச்சில் செலுத்தப்படாவிடின் துண்டிக்கப்பட்டு நிறுவனத்தின் அலுவல்கள் பாதிக்கப்படுவதை தடுப்பதற்காக ஏற்பாடுகள் காணப்பட்ட மீண்டுவரும் செலவு விடயத்தின் கீழ் உரிய செலவுகளை மேற்கொண்டு அடுத்த காலாண்டில் சரியான செலவு விடயத்திற்கு கணக்கீடு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், சுட்டிக்காட்டியிருந்த செலவுகள் ஸிகாஸ் முறைமையின் மூலம் கணக்கீடு செய்வதற்கு முடியாமல் போனது எனவும், எதிர் காலத்தில் இவ்வாறான நிலைமை ஏற்படாதவாறு நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது எனவும் உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டதெனவும் அறிவிக்கின்றேன். | |

## 2.2 பொறுப்புகள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு அணுகுதல்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2022 திசெம்பர் 13 திகதிய 2022/05 இலக்கம் கொண்ட அரச கணக்குகள் வழிகாட்டலின் பந்தி 3.3 இல் குறிப்பிட்டுள்ளவாறு அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படும் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஈடுபாட்டுப் பொறுப்பு இலக்கத்தின் படி வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், அலுவலகத்தின் கூட்டுத்தொகை ரூபா 1,390,406 தொகைக்கான ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் பின் இணைப்பு இலக்கம் iii இன் கீழ் காணப்படும் ஈடுபாட்டுப் | நி.பி. 115(125) பந்திக்கு இணங்க நிதி ஆண்டிற்கு முன்னரான திசெம்பர் மாத்திற்குரிய ஜனவரி மாதத்தில் கிடைக்கப் பெற்ற கொடுப்பனவுகள் நடைமுறை ஆண்டில் செலவு ஏற்பாடுகளை பயன்படுத்தி அந்த உரிமைகள் தீர்க்கப்பட்டமையால் பொறுப்புக்கள் பதிவேட்டில் உட்படுத்தப்படவில்லை. எவ்வாறாயினும், சுட்டிக் காட்டியுள்ளவாறு பொறுப்புக்கள் கூற்றில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டதென அறிவிக்கப்பட்டிருந்தது. | அரச கணக்கு வழிகாட்டலின் ஆலோசனையின் படி ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | | |
| (அ) | நிதிப் பிரமாணங்கள் 880 மற்றும் 891(i) | அரச உத்தியோகத்தர்களுக்கான பிணை கட்டளைச் சட்டத்தின் படி பிணை வைக்க வேண்டிய அனைத்து உத்தியோகத்தர்களினாலும் பிணை வைக்கப்படுகின்றதென பொறுப்பாக இருப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்தது. பிணை வைக்க தேவையான அனைத்து உத்தியோகத்தர்களினதும் பெயர்கள் அடங்கிய பிணைப் பதிவேடொன்று, ஒவ்வொரு திணைக்களத்திலும் தலைமை அலுவலகத்தில் மிகவும் சிறந்த முறையில் அகர வரிசை அடிப்படையில் தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்பட வேண்டியிருந்த போதிலும், அந்தப் பதிவேடு நாளதுவரை ஆக்கப்பட்டு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | தற்போது பிரதமர் அலுவலகத்தில் பிணைப் பதிவேடொன்று பேணப்பட்டு வருவதுடன் எதிர் காலத்தில் பிணை வைப்பதற்கு தேவையான அனைத்து உத்தியோகத்தர்களும் நிதிப் பிரமாணம் 891(i) பிரகாரம் பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாண ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 13 திகதிய 2022/05 இலக்கம் கொண்ட அரச கணக்கு வழிகாட்டலின் பந்தி 8.3 மற்றும் 2020/02 இலக்கம் கொண்ட அரச கணக்கு சுற்றறிக்கையின் பந்தி இலக்கம் 10.1 | அனைத்து அறிக்கையிடும் நிறுவனங்களினால் வைப்புக்களுக்காக இணக்கக் கூற்றொன்று தயாரிக்கப்பட வேண்டியதுடன், அந்த இணக்கக் கூற்றின் பிரதியொன்று 2023 பெப்ரவரி 28 திகதி அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன்படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அரச கணக்கு வழிகாட்டல் 2020/02 பிரகாரம் வைப்புக்கள் தொடர்பாக இணக்கக் கூற்று 2023.02.17 திகதி அரச கணக்குத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட போதிலும் அதன் பிரதியொன்று தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு அனுப்புவதற்கு இயலாமல் போனதென | அரச கணக்கு வழிகாட்டல் மற்றும் சுற்றறிக்கை அறிவுரைகளின் படி செயற்பட வேண்டும். |

அறிவிக்கப்பட்டிருந்தது.

### 2.4 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பண பீ கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பண ‘‘பீ’’ கணக்கு வருடாந்த இணக்கக் கூற்றில் இறுதி தனிப்பட்ட மீதி ரூபா 50,086,632 தொகையாக காணப்பட்டதுடன், அங்கத்தவர் கடன் பதிவேட்டின் இறுதி மீதி ரூபா 49,509,284 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 577,348 இற்கான இணக்கமின்மை ஒன்று அவதானிக்கப்பட்டது. | கடன் வழங்கள் மற்றும் திருப்பி அறவீடு செய்தல் தொடர்பாக கணினி மயப்படுத்தப்பட்ட பதிவேடொன்று பேணப்படுகின்றது எனவும், அந்த பதிவேட்டின் படி 2022.12.31 திகதியில் உள்ளவாறு இணக்கக் கூற்றின் 3.1 பதிவேட்டின் படி மீதிகள் சரியானவை எனவும், அங்கத்தவர் கடன் பதிவேட்டின் அவதானிப்பின் படி சுட்டிக் காட்டியிருந்த ரூபா 577,347.84 இற்கான வித்தியாசத்தை இனங்கண்டு அதனை சரி செய்யப்பட்டதெனவும், எதிர் காலத்தில் அங்கத்தவர் கடன் பதிவேடு உரிய முறையில் நாளதுவரை ஆக்கப்படுவதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டதென அறிவிக்கப்பட்டிருந்தது. | துணைப் பதிவேடுகள் நாளதுவரை ஆக்கப்பட்டு பேணப்படல் வேண்டும். |
| (ஆ) | 2022 செப்தம்பர் மாதத்தில் சேவையை விட்டுச் சென்றுள்ள உத்தியோகத்தர் ஒருவரிடம் ரூபா 191,602 இற்கான இடர் கடன் தொகையொன்று கணக்காய்வுத் திகதி அளவிலும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | சேவையை விட்டுச் சென்றுள்ள ஊழியர் ஒருவருக்கு 2022.09.21 திகதி சேவையை விட்டுச் சென்றமைக்கான கடிதம் வழங்கப்பட்டதெனவும், அதன் மூலம் செலுத்த வேண்டிய கடன்களை செலுத்த வேண்டுமென அறிவிக்கப்பட்டதெனவும், மீண்டும் 2023.02.15 திகதியும் அவருக்குரிய கடன் தொகையை செலுத்தும் படி அறிவித்து, தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதென அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலுவை கடன் தொகையை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | ஓய்வு பெற்றுள்ள 05 உத்தியோகத்தர்களிடம் கூட்டுத்தொகை ரூபா 1,034,577 இற்கான கடன் தொகையொன்று 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 5 ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதியத் திணைக்களத்தினால் ஏற்பாடுகள் விடுவித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை எனவும், ஏற்பாடுகள் விடுவிக்கப்பட்ட போது அந்தக் கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களின் நிலுவை கடன் மீதிகள் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

2022 ஆண்டிற்கான பிரதமரின் அறிவுரை மற்றும் வழிகாட்டலின் கீழ் பல்வேறு துறைகள் தொடர்பாக நடாத்தப்பட்ட கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் 95 காணப்பட்டதுடன், அவற்றில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் / தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்ட விடயங்கள் 355 ஆக இருந்தது. மேலும், மேற்கொள்ளப்பட்ட சாத்தியக்கூறு ஆய்வுகளின் எண்ணிக்கை 19 தொகை என செயலாற்றல் அறிக்கையில் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டது. மேற்கூறிய செயலாற்றல் அறிக்கை தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | | | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | கூட்டம் | நடைபெற்ற திகதி | விளக்கமளித்தல் | |
| (அ) | கூட்டுவர்த்தக சபை, சிறு மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சி பிரிவு மற்றும் ஆடைத் தொழில் பிரதிநிதிகளுடன் நாட்டில் நிலவும் பொருளாதார நிலைமை மற்றும் சிக்கல்கள் தொடர்பாக 2022 ஆண்டில் நடாத்தப்பட்ட 03 கூட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பாக 2022 திசெம்பர் 31 திகதி அளவிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்படவில்லை. | 1. ஒன்றித்த வாணிப சபையுடன் கலந்துரையாடல்<br>2. சிறு மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சியாளர் பிரிவின் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடல்<br>3. ஆடைக் கைத்தொழில் தொடர்பான கலந்துரையாடல் | 2022.06.02<br>2022.06.23<br>2022.07.05 | இந்த கூட்டம் முன்னைய பிரதமர் 2022.5.12 திகதி நியமனம் பெற்ற பின்னர் அப்போது காணப்பட்ட நெலுக்கடி நிலைமைக்கு முகம் கொடுப்பதற்காக விரைவான தீர்மானம் பெற்றுக்கொள்ளும் குறிக்கோளுடன் நடாத்தப்பட்டவுடன், அதன் விளைவுகள் என நாட்டு மக்களின் நாளாந்த வாழ்க்கை நிலை உரிய முறையில் பேணிச் செல்வதற்கு ஓரளவு தூரம் முடியுமானது எனவும், இந்தக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் காணப்படாததுடன், அது தொடர்பாக 2022. பிரதமர் அலுவலகத்தின் செயலாற்றல் அறிக்கையில் தெளிவாக காட்டப்பட்டுள்ளது எனவும், அதன்படி தீர்மானங்கள் காணப்படாமையால் தொடர் நடவடிக்கை எடுக்கத் தேவைப்படவில்லை எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2022 ஜனவரி 01 திகதி முதல் 2022 ஜூன் 30 திகதி வரை நடாத்தப்பட்ட கூட்டங்கள், கலந்துரையாடல்கள் மற்றும் விழாக்கல் 11 தொடர்பாக கூட்ட பதிவுகள் பிரதமர் அலுவலகத்தில் அபிவிருத்திப் பிரிவு 1 இற்கு அனுப்பப்பட்ட போதிலும் அதற்குரிய நடவடிக்கைகள் மற்றும் தொடர் நடவடிக்கைகள் குறிப்பிட்ட பிரிவினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது என அவதானிக்கப்படவில்லை. | 09 சந்தர்ப்பங்களில் பிரதமர் அலுவலகத்தில் கூட்டங்கள் நடாத்துவதற்கு தேவையான வசதிகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன், தொடர் அலுவல்கள் நகர அபிவிருத்தி அமைச்சு, பிரதமர் அலுவலகத்தின் மத விவகாரப் பிரிவு, பொது மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு, கல்வி அமைச்சு, மீன் பிடித்துறை அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததென அறிவிக்கப்பட்டிருந்தது. | கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஏனைய நிறுவனங்களுக்கு சொந்தமான 17 வாகனங்களை உரித்தாக்காமல் பிரதமர் அலுவலகத்தால் பயன்படுத்தப்பட்டிருந்தது. அவற்றில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பிரதமர் அலுவலகத்தின் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த வாகனம் ஒன்று 2022 ஜனவரி 14 திகதி விபத்துக்குள்ளாகி இருந்ததுடன், அதற்காக ரூபா 46,600 இற்கான நட்டத்திற்கான நட்டஈடு இலங்கை காப்புறுதி நிறுவனத்தினால் பெறப்பட்டதென கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை. | பிரதமர் அலுவலகத்திற்கு ஏனைய அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களில் இருந்து தற்காலிக அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்கள் 17 தொகையாகும். அவற்றில் வீதி அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து பெற்றிருந்த 05 வாகனங்களும் காணப்பட்டன. வீதி அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து பெற்றிருந்த வாகனங்கள் அவர்களினாலேயே காப்புறுதி செய்யப்பட்டிருந்தது. அத்துடன், விபத்தொன்றின் போது அது தொடர்பாக அந் நிறுவனத்திற்கு அறிவிக்கப்படுகின்றது. காப்புறுதி நட்டஈடு பெற்றுக்கொள்ளல் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. | வெளி நிறுவனங்களில் இருந்து வாகனங்கள் சாட்டுதல் செய்தல் மற்றும் அவற்றின் விபத்துக்களை அறிவித்தில் மற்றும் நட்டஈடு அறவீடு செய்வதற்காக முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | விபத்துக்குள்ளாகிய வாகனம் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான வாகனம் ஒன்றென அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | பிரதமர் அலுவலகத்திற்கு சொந்தமான 07 வாகனங்கள் ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களுக்கு தற்காலிகமாக வழங்கப்பட்டிருந்த போதிலும், இந்த வாகனங்களை திருப்ப பிரதமர் அலுவலகத்திற்கு ஒப்படைக்க வேண்டிய நிச்சயிக்கப்பட்ட திகதியொன்று அங்கு குறிப்பிடப்பட்டிருக்காததுடன், 2023 ஏப்ரல் 30 கணக்காய்வுத் திகதி அளவிலும் இந்த வாகனங்கள் சாட்டப்பட்ட அலுவலகங்களினாலேயே பயன்படுத்தப்பட்டிருந்தது. | ஒரு வாகனம் தற்போது பிரதமர் அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், ஏனைய வாகனங்கள் தேவைப்பாட்டின் படி அவ்வலுகங்களினாலேயே தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்றது எனவும், ஜனாதிபதி செயலகத்தில் மற்றும் பிரதமர் அலுவலகத்தில் காணப்படும் தேவைப்பாடுகளின் படி அடிக்கடி வாகனங்கள் பரிமாற்றம் செய்தல் நடைபெறுவதுடன், அவை அனைத்தும் உரிய முறையில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. திருப்பி ஒப்படைப்பதற்கான நிச்சயிக்கப்பட்ட திகதி ஒன்று அறிவிக்கும் படி உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டதென அறிவிக்கப்பட்டிருந்தது. | அரச ஆதனங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கூடிய வேலைத் திட்டமொன்றை செயற்படுத்த வேண்டும். |
| (இ) | பிரதமரின் பாதுகாப்பு வாகன அணியில் அடங்கியுள்ள 3 பென்ஸ் கார்கள் 2023 ஏப்ரல் வரை பதிவு செய்யப்பட்டிருக்காததுடன், அவற்றில் ஒரு வாகனம் காப்புறுதி செய்யப்பட்டிருக்கவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது. | ஆரம்ப கால கட்டத்தில் பாதுகாப்பு நோக்கம் கருதி பிரமருக்கு ஒதுக்கப்பட்டுள்ள சில உத்தியோகபூர்வ வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை எனவும், அண்மைக் காலத்தில் கொள்வனவு செய்யப்பட்டுள்ள வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன எனவும், A 233259 வாகனம் தற்போது ஓட்ட நிலையில் காணப்படாததுடன், ஓட்ட நிலைக்கு மாற்றிய பின்னர் காப்புறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | அரச ஆதனங்களின் உரிமை மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கூடிய வேலைத் திட்டமொன்றை செயற்படுத்த வேண்டும். |
| (ஈ) | ஏனைய நிறுவனங்களுக்கு வாகனங்கள் விடுவித்தல் தொடர்பாக கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி ஜனாதிபதி அலுவலகத்தின் 03 வாகனங்கள் பிரதமர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தன என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், பிரதமர் அலுவலக பதிவுகளின் படி | CAV 8103 குண்டு துளைக்காத வாகனம் ஜனாதிபதி செயலகத்தினால் தற்காலிகமாக ஒதுக்கும் படி விண்ணப்பிக்கப்பட்டிருந்தது. இலக்கம் CAC – 4469 கொண்ட வாகனம் இதுவரை பிரதமர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. A | அரச ஆதனங்களின் உரிமை பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கூடிய வேலைத் திட்டமொன்றை செயற்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஜனாதிபதி அலுவலத்தில் இருந்து 04 வாகனங்கள் கிடைத்திருந்ததெனவும், குறிப்பிட்ட வாகனங்களின் இலக்கங்களும் ஒன்றிற்கு ஒன்று இணங்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | 233364 வாகனம் பிரதமர் அலுவலத்தினால் பயன்படுத்தப்பட்ட போதிலும் இதுவரை எழுத்துமூலமாக அறிவித்திருக்கவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது. | |

## 3.3 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஜுலை 09 திகதி நாட்டில் ஏற்பட்ட பதட்டமான சூழ்நிலையின் காரணமாக குணடு துளைக்காத வாகனத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டம் கணக்காய்வுத் திகதியாகிய 2023 மார்ச் 29 திகதி வரை கணிக்கப்பட்டிருக்கவில்லை. ரூபா 263 மில்லியனிற்கான காப்புறுதி உள்ளடக்கத்தில் ரூபா 200 மில்லியனிற்கான தொகை மாத்திரம் உள்ளடக்குவதற்கு இலங்கை காப்புறுதிக் கம்பனியினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. திருத்த வேலைக்கு தேவையான உதிரிப் பாகங்கள் நாட்டில் காணப்படாமையால் 09 மாதங்களுக்கு அண்மித்த காலம் அந்த வண்டி பாவனைக்கு உதவாத நிலைமையிலேயே காணப்பட்டது. | குண்டு துளைக்காத வாகனத்திற்கான காப்புறுதி உள்ளடக்கம் ரூபா 263 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், காப்புறுதி நலன்கள் பெற்றுக்கொள்ளும் போது குண்டு துளைக்காத பாதுகாப்பு வாகனமொன்றாக காணப்படுவதனால் பாவனைக்கு உதவாத வாகனத்தை காப்புறுதிக் கம்பனிக்கு வழங்கப்படாமையால் காப்புறுதி நலன் என ரூபா 200 மில்லியன் வழங்கியிருந்ததெனவும், குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தினால் வாகனம் பெற்றுக்கொள்ளப்பட்டதனால் மற்றும் பொலிஸ் முறைப்பாடொன்று காணப்படாமையால் ஆரம்ப விசாரணை அறிக்கை தாமதம் அடைந்ததெனவும், குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தின் படி நட்டம் ரூபா 197 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், இயந்திரப் பொறியியலாளர் பரிந்துரையின் படி இந்த இதற்கு சமனான ஏனைய குண்டு துளைக்காத வாகனம் ஒன்றிற்கு உதிரிப் பாகங்கள் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்வதற்காக பாவணைக்கு உதவாத வாகனம் பாதுகாப்பாக பிரதமர் அலுவலத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. | நட்டங்களை மீளளிப்பு செய்தல் / தீர்த்துக் கொள்வதற்காக விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மோட்டார் வாகனம் ஒன்றிற்கு 2022 மே 10 திகதி ரூபா 874,586 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்ததுடன், அந்த நட்டத்தை முழுமையாக காப்புறுதி நிறுவனத்தின் மூலம் அணவல் செய்யப்பட்டதென எழுத்துமூல சான்றுகள் கோப்பினுள் உட்படுத்தியிருக்கவில்லை. இந்த வாகனத்தின் திருத்த வேலைகள் செய்வதற்கு தேவையான உதிரிப் பாகங்கள் கொள்வனவு செய்தல் தொடர்பான பில் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவை என காப்புறுதிக் கம்பனியினால் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, இந்த வாகனத்திற்கு ஏற்பட்டிருந்த மொத்த நட்டம் மற்றும் காப்புறுதிக் கம்பனியினால் அணவல் செய்யப்பட்ட சேதத்தின் அளவினை கணக்காய்வின் போது கண்டிறிய முடியாது இருந்தது. | வாகனத்தின் உள்நாட்டு முகவர் சமர்ப்பித்திருந்த மதிப்பீடு விலை அதிகமாக இருந்தமையால் பிரதமர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த கராஜ் ஒன்றிலிருந்து மதிப்பீடொன்று பெற்று குறிப்பிட்ட திருத்த வேலை மேற்கொள்ளப்பட்டிருந்ததெனவும், காப்புறுதி நிறுவனத்தினால் கிடைத்திருந்த தொகை போதியளவாக காணப்படாமையால் அத் தொகையை அதிகரித்துத் தரும்படி கராஜினால் காப்புறுதி நிறுவத்திடம் கோறப்பட்டிருந்ததுடன், குறிப்பிட்ட ஆவணங்கள் தற்போது கோவை படுத்தப்பட்டுள்ளது எனவும், தற்போது வாகனத்தின் திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு ஓட்ட அலுவல்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், காப்புறுதிக் கம்பனி மற்றும் கராஜ் இடையே செலுத்தும் தொகை தொடர்பாக இணக்கப்பாடொன்று காணப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது. | நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக தீர்மானிக்கப்பட்டு அவற்றை தீர்ப்பதற்கு முறையாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2022 மே 24 திகதி மற்றும் 2022 மே 31 திகதி ஏற்பட்டிருந்த 2 வாகனங்களுக்குரிய விபத்துக்கள் நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேட்டில் காட்டப்பட்டிருந்த போதிலும், அலுவலகத்தின் கோப்பு இலக்கம் PMO/ADM/02/03/2101 இன் படி இந்த விபத்து தொடர்பாக முறையான விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டதென கணக்காய்வினால் உறுதிப்படுத்திக்கொள்ள முடியவில்லை. | KS – 2101 மற்றும் CAR – 2957 இரண்டு வாகனங்களுக்கான நி.பி. 104 விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் படி நடவடிக்கை எடுத்தல் விரைவு படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | 2022 திசெம்பர் 01 திகதி விபத்துக்குள்ளாகிய வாகனங்கள் தொடர்பாக ரூபா 129,100 இற்கான சேதம் ஒன்று அறிவிக்கப்பட்டிருந்தது. அந்தத் தொகையினை காப்புறுதிக் கம்பனியினால் அணவல் செய்யப்பட்டதென நட்டங்கள் சேதங்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதனை உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | காப்புறுதிக் கம்பனியின் கீழ் பதிவு செய்யப்பட்ட கராஜ் ஒன்றில் வாகனத்தின் திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு தற்போது ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது எனவும், நி.பி. 104(3) இன் படி ஆரம்ப விசாரணை அறிக்கை வழங்கப்பட்டுள்ளதுடன் கொடுப்பனவு விபரங்கள் இதுவரை அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட்டு அனைத்து தகவல்களும் கோவைப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | நி.பி. 104(1) பிரகாரம் நட்டம் ஏற்பட்டிருந்த திகதி முதல் மூன்று மாதங்களுக்குள் முழுமையான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், நட்டத்தின் பெறுமதி கூட்டுத்தொகை ரூபா 203,181,631 ஆக காணப்பட்டதுடன் 2022 ஆண்டில் ஏற்பட்டிருந்த 08 வாகன விபத்துக்கள் தொடர்பாக 2023 ஏப்ரல் 17 கணக்காய்வுத் திகதி அளவிலும் அந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | 2022 ஆண்டின் போது ஏற்பட்டிருந்த அரசியல் மாற்றம் காரணமாக ஏற்பட்டிருந்த நிருவாக கட்டமைப்பு மாற்றத்தின் காரணமாக நி.பி. 104 விசாரணைக்காக நியமனம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்ததுடன், மீண்டும் அந்தக் குழுவிற்காக உத்தியோகத்தர்கள் நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் படி நடவடிக்கை எடுத்தல் விரைவு படுத்தப்பட வேண்டும். |

### 3.4 2022 ஆண்டில் நாட்டில் ஏற்பட்டிருந்த பதட்ட நிலைமை மீது ஏற்பட்டிருந்த நட்டங்கள்

2022 ஆண்டில் பல சந்தர்ப்பங்களில் ஏற்பட்டிருந்த பதட்ட நிலைமை மீது பிரதமர் அலுவலகத்திற்கு சேதங்கள் ஏற்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பதட்ட நிலை காரணமாக பிரதமர் அலுவலகத்திற்கு ஏற்பட்டிருந்த மொத்த சேதம் ரூபா 111,043,124 தொகை என 2023 ஏப்ரல் 21 திகதிய PMO/FIN/01/13/01/01/2023 இலக்கம் கொண்ட கடிதத்தின் மூலம் பிரதமர் அலுவலகத்தினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த சேதங்கள் தொடர்பாக நி.பி. 103 – நி.பி. 104 இன் படி நடவடிக்கை எடுக்கப்படல் தொடர்பாக தகவல்கள் 2023 ஏப்ரல் 28 கணக்காய்வுத் திகதி அளவிலும் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்காததுடன், இந்த இனங் காணப்பட்ட நட்டங்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்வில்லை. | 2022.05.09 திகதி மக்கள் தொடர்பு பிரிவு மற்றும் அலரி மாளிகையின் ஆதனங்களுக்கு ஏற்பட்டிருந்த நட்டங்கள் தொடர்பாக கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டதெனவும், காணாமல் போன பண்டங்கள் தொடர்பாக முழுமையான அறிக்கை பெற்றுக்கொள்ளல் நிதிப் பிரமாணம் 104(3), 104(4) மற்றும் நிதிப் பிரமாணம் 109 இன் படி சேதங்கள் மற்றும் நட்டங்கள் பதிவேட்டில் பதிவழிப்பதற்காக பொலிஸ் அறிக்கையொன்று கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்திலிருந்து வேண்டப்பட்டுள்ளது எனவும், 2020.08.28 திகதிய 01/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 2.1 பிரகாரம் மோசடி மற்றும் நடைமுறையில் உள்ள முறைமையில் வழு அல்லாத போது ரூபா 5 மில்லியனை மிகைக்காத | நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் படி நடவடிக்கை எடுத்தல் விரைவு படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சேதங்கள் தொடர்பான நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளமையால் பொலிஸ் அறிக்கை கிடைத்த பின்னர் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | 2022 ஆண்டின் பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் படி திறைசேரி படிவம் 66 மற்றும் பதட்ட நிலைமை காரணமாக நட்டங்கள் ஏற்பட்டதென இனங் காணப்பட்ட பண்ட அட்டவணையில் 13 வகையான பண்டங்களுக்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டதுடன், 2022 பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் படி பதட்ட நிலைமை காரணமாக சேதமடைந்த பண்டங்கள் என இனங் காணப்பட்டிருந்த 27 வகையான பண்டங்கள் பதட்ட நிலைமை காரணமாக சேதமடைந்த பண்டங்கள் தொடர்பாக பிரதமர் அலுவலகத்தில் இருந்து வழங்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | 2022.07.09 திகதி போராட்ட நிலைமையினால் சேதமடைந்திருந்த பண்டங்களை 2022.08.03 திகதி இனங் கண்டிருந்ததுடன், பொலிஸ் முறைப்பாட்டிலும் உட்படுத்தப்பட்டிருந்ததெனவும், அந்த சந்தர்ப்பத்தில் சேதமடைந்த உபகரணங்கள் மாத்திரம் இனங் காணப்பட்டதுடன், அந்த பண்டங்களை இனங் காணும் போது இரசாயன பகுப்பாய்வு அறிக்கை பெற்றுக்கொள்ளும் வரை மற்றும் குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தினால் விரல் அடையாளம் பெற்றுக்கொள்ளும் வரை சில அலுவலகங்கள் மூடப்பட்டமையால் சேதமடைந்த உபகரணங்களை இனங் காணல் சிக்கல் தன்மையுள்ள நிலைமை ஒன்று ஏற்பட்டிருந்ததெனவும், போராட்டம் தொடர்பாக 2023.04.01 திகதிய கடிதத்தின் மூலம் பிரதான கணக்காளருக்கு அனுப்பப்பட்டிருந்தது நி.பி. 104 இன் படி தயாரிக்கப்பட்டிருந்த இறுதி அறிக்கையில் காணாமல் போன உபகரணங்களுடன் குறிப்பிட்ட கட்டிடத்தின் திருத்த வேலைச் செலவுடனான மதிப்பீட்டறிக்கையாகும் என குறிப்பிடப்பட்டிருந்தது. | சேதமடைதல் மற்றும் நட்டங்கள் தொடர்பான விபரங்கள் சரியாக ஆவணப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | பதட்ட நிலைமை காரணமாக 20 வகையான பண்டங்கள் காணாமல் போயிருந்தது என பிரதமர் அலுவலகத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2022 ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட பண்டக் கணிப்பீட்டில் அது தான் காரணம் என இனங் கண்டிருக்கவில்லை. | சரி செய்வதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது என அறிவிக்கப்பட்டிருந்தது. | பொருட் பதிவேடு மற்றும் பண்டக் கணிப்பீட்டு அறிக்கை சரியாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

## 4. முகாமைத்துவ பலவீனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஏப்ரல் 26 திகதிய 03/2022 இலக்கம் கொண்ட தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்கச் செலவீனங்கள் மிகவும் அத்தியவசியமான சேவைகளுக்கு மாத்திரம் ஈடுபடுத்தப்பட வேண்டும் எனவும், கட்டிட நிர்மாண வேலைகள் மற்றும் வாடகைக்கு எடுத்தலை நிறுத்துவது கடுமையாக கடைபிடிக்க வேண்டும் எனவும், குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், பிரதமர் அலுவலக உத்தியோகபூர்வ வாசஸ்தளத்தின் பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகளுக்காக ரூபா 182 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், 2021 ஆண்டிலும் ரூபா 58 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது என மேலும் அவதானிக்கப்பட்டது. | முன்னைய பிரதமர் ஐந்தாவது நிறைவேற்று ஜனாதிபதி அவர்களின் உத்தியோகபூர்வ வாசஸ்தளத்தை நவீனமயப்படுத்தும் அலுவல்கள் இலங்கை கடற்படையின் உழைப்புப் பங்களிப்பின் கீழ் 2021 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2021.01.05 திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற அங்கீகாரத்தின் மீதாகும். அதன்படி, 002-01-01-0-2001 செலவு விடயத்தின் கீழ் ரூபா 180 மில்லியனுக்கான ஏற்பாடுகள் வருடாந்த பாதீட்டில் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், வேலைகளை பூர்த்தி செய்வதற்காக ஏற்பாடுகள் போதியளவாக காணப்படவில்லை எனவும், அதன் காரணமாக இறுதிக் கட்டத்தில் காணப்பட்ட உத்தியோகபூர்வ வாசஸ்தளத்தை நவீனமயப்படுத்தும் அலுவல்களை பூர்த்தி செய்வதற்காக தேசிய பாதீட்டுத் திணைக்களத்தில் இருந்து ரூபா 300 மில்லியனிற்கான மேலதிக ஏற்பாடுகள் பெற்றுக்கொண்ட பின்னர் ஈடுபாட்டுப் பொறுப்புக்களை ஏற்படுத்தி இதனை பூர்த்தி செய்வதற்கு 03/2022 சுற்றறிக்கைக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும், அவ்வாறாயினும், வருடாந்த ஏற்பாடுகள் திருத்தியதன் மூலம் மேற்கூறிய செலவு | தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் அறிவுரையின் படி செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | விடயத்தின் ஏற்பாடுகள் ரூபா 190 மில்லியன் வரை மீண்டும் வரையறுக்கப்பட்டமையால் ரூபா 4 மில்லியனிற்கான ஏற்பாடுகள் இந்த செலவு விடயத்திற்காக மாற்றுவதற்காக நேரிட்டது என அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | 2022 ஏப்ரல் 26 திகதிய தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை இலக்கம் 03/2022 மற்றும் அதன் xiv அத்தியாயத்தின் படி அரச செலவினங்கள் வரையறுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 569,344 இற்கான செலவொன்று மேற்கொண்டு பிரதமரின் பாராளுமன்ற வெளியீடு அடங்கிய புத்தகத்தின் முதலாம் பாகம் அச்சிடப்பட்டிருந்ததுடன், அதன் 197 பிரதிகள் 2023 ஏப்ரல் 21 திகதி வரை வினியோகிக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | கௌரவ பிரதமரின் பாராளுமன்ற உரைகள் அடங்கிய புத்தகத்தின் 197 பிரதிகள் ஊடக மற்றும் தொடர்பாடல் பணிப்பாளரின் பொறுப்பில் வைக்கப்பட்டிருந்தது அந்த புத்தகத்தின் அனைத்து பாகங்களினதும் வெளியீட்டு விழா 2023 ஆகஸ்ட் மாதத்திற்கு நிச்சயிக்கப்பட்டிருந்தது எனவும், அத்துடன் வினியோக அலுவல்கள் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது என அறிவிக்கப்பட்டிருந்தது. | தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் அறிவுரையின் படி செயற்பட வேண்டும். |

**5. மனிதவள முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 561 தொகையாக காணப்பட்டதுடன், அவற்றில் 286 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன. அந்த வெற்றிடங்களில் 30 சிரேஷ்ட மட்ட பதவிகளாகும். | செலவுகளை முகாமைத்துவம் செய்யும் தலைப்பின் கீழான சுற்றறிக்கையின் பிரகாரம் பதவியணி அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை மீது பிரதமர் அலுவலகத்தின் கடமைகள் நிறைவேற்றுவதற்கு எடுத்த நடவடிக்கையின் படி கௌரவ பிரதமர் தனது அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 168 இனை 18 வரை 2022 செப்தம்பர் மாதம் அளவில் குறைத்திருந்ததுடன், அதற்கு நேரொப்ப செயற்பாட்டுப் பதவியணியும் குறைக்கப்பட்டமையால் குறைந்த கிரயத்தில் பிரதமர் அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதென அறிவிக்கப்பட்டிருந்தது. | வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது அரச சேவையை செயற்திறனுள்ள மற்றும் ஆக்கபூர்வமாகப் பேணிச் செல்லக்கூடியவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை திருத்திக்கொள்ள வேண்டும். |